**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை – 2019**

----------------------------------------------------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, நிகர சொத்து மாற்றக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் சபையின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். சபையை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது சபையினது பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு நியமங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருக்கும் ரூபா 160,515,223 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக 07 ஆம் இலக்க கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தெரிவிக்கப்படவில்லை. | தொடர்புடையவற்றை 2020 நிதியாண்டிற்கான நிதிக்கூற்று தயாரிப்பின் போது திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை மீளப் பெறுமதியிட்டு நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டும். |

### 1.5.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி | ஒத்த அறிக்கையின் பிரகாரமான பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 128,302,963 | 129,694,533 | 1,391,570 | சில சொத்துக்களை வகைப்படுத்தும் போது நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட சொத்தினது வகை பட்டோலையில் குறிப்பிடப் பட்டவற்றுடன் வேறுபடுவதால் குறித்த சொத்துக்களில் வேறுபாடு இருப்பதைத் தயவாகத் தெரிவிக்கின்றோம். உதாரணமாக, நிதிக் கூற்றுக்களில் தளபாடங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள ஒரு விடயம் பட்டோலையில் அலுவலக உபகரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் வகைச் சொத்துக்கள் பட்டோலையுடன் சீராக்கல் செய்யப்பட்டு இரட்டைப் பதிவின் மூலம் இவ்வாண்டில் திருத்தம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனினும், நிதிக் கூற்றுக்களிலும் சொத்துப் பட்டோலையிலும் தொடர்ந்து காணப்படும் வேறுபாடுகளைத் திருத்தம் செய்வதற்காக சகல சொத்துக்களையும் மீளப் பெறுமதியிட்டு வேறுபாடுகளை திருத்தும் | நிதிக் கூற்றுக்களில் திருத்தம் மேற்கொள்ளப் பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | நடவடிக்கைகள் தற்போது நிலவும் நோய் சூழல் காரணமாக தாமதம் ஆகியுள்ளது. | |
| (ஆ) | பெற வேண்டியன, இடர் கடன் மற்றும் விழா முற்பணம் | 7,984,983 | 7,972,548 | 12,435 | ஐந்தொகையில் உள்ள கடன்பட்டோர் மீதிக்கும் நிரலில் காணப்படும் மீதிக்குமிடையே ரூபா 12,435 வேறுபாடு காணப்பட்டது. முன்னர் இது பெருமளவு மீதியின் வித்தியாசமாகக் காணப்பட்டபோதும், பின்பு மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைகளின் பின்னர் மேற்குறித்த அளவினதாகக் குறைவடைந்திருந்தது. எனினும், ஆவணங்களைத் தேடிக் கண்டுபிடிப்பது வசதியற்று இருந்ததால் இதனை மேலும் பரிசீலிக்க முடியாதுள்ளது. 2018.12.27 ஆந் திகதிய முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை திறைசேரியிடம் கேட்டறிவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, 2019.07.03 ஆந் திகதிய NDDCB/FIN/MIN/2019/11 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையைக் கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பாதுகாப்பு | நிதிக் கூற்றுக்களில் திருத்தம் மேற்கொள்ளப் படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அமைச்சினூடாக மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக இக்கடிதம் 2019.08.22 ஆந் திகதியன்று பொது முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. எனினும், இதுவரை ஆலோசனை கிடைக்கப் பெறாததால் மீண்டும் தொடர் நடவடிக்கையில் ஈடுபடுவது இதுவரை நடைபெறவில்லை. | |

**1.5.3 தொங்கல் கணக்கு**

| விடயம் | தொகை | தொங்கற் கணக்கின் காலப்பகுதி | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| தொங்கற் கணக்கு | 480,900 | 6 ஆண்டுகள் | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட மீதியானது 2014 ஆம் ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டுச் சீராக்கலின் மூலம் உருவாகிய மீதி ஆகும். இதனைத் தீர்வு செய்வதற்கு தொடர்புடைய சகல கணக்குகளும் பரிசீலிக்கப் பட்டவாறுள்ளபோதும், இதுவரை கண்டுபிடிக்கப்படாதுள்ளது. அதற்கமைய, மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காகத் திறைசேரியிடம் கேட்டறியலாம் என 2018.12.27 ஆந் திகதிய கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, NDDCB/FIN/MIN/2019/11 எனும் 2019.07.03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் கடித மூலம் தொடர்பு கொண்டு இவ்வழுவைத் திருத்தம் செய்வதற்கான ஆலோசனை கோரப்பட்டுள்ளது. பாதுகாப்பு | தொங்கல் கணக்கு தீர்வு செய்யப்பட வேண்டும். |

அமைச்சினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக இக்கடிதம் 2019.08.22 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. எனினும், இதுவரை ஆலோசனை கிடைக்கப் பெறாமையால் தொடர் நடவடிக்கை மூலம் மீண்டும் விசாரிக்கும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 முற்பணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்பண மீதியாகிய ரூபா 1,782,059, 20 ஆண்டுகளுக்கு மேற்பட அறவிடப்படாதுள்ளது. இந்த மீதிகளை உறுதி செய்வதற்கான மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இம்முற்பண மீதி தொடர்பாக NDDCB/FIN/MIN/2019/11 எனும் 2019.07.03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொண்டு இவ்வழுவைத் திருத்தம் செய்வதற்கான ஆலோசனை கோரப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக இக்கடிதம் 2019.08.22 ஆந் திகதி பொது முயற்சி திணைக்களத்தின் பணிப்பாளருடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. எனினும், இதுவரை ஆலோசனை கிடைக்கப் பெறாமையால் தற்சமயம் இது தொடர்பாகத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சரிவர இனங்காணப்பட்டு தீர்வு காணப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு ஆட்பட்டோர் (சிகிச்சையும் புனர்வாழ்வும்) தொடர்பான அதிகாரச் சட்டச்சட்டத்தின் 7 ஆம் பிரிவு | இப் பிரிவின் பிரகாரம் சபை நியமிக்கப் படவில்லை. | 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு ஆட்பட்டோரின் புனர்வாழ்வு தொடர்பான அதிகாரச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டும். அதனால் இச்சபைக்கு அதனுடன் நேரடித் தொடர்பு கிடையாது எனத் தயவாகச் சுட்டிக் காட்டுகின்றோம். எவ்வாறாயினும், அதிகாரச் சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட வேண்டிய மூவருக்கு மேற்படாத அபாயகர ஔடதங்கள் தேசிய சபையால் பெயரிடப்பட வேண்டிய சபைக்குக் குறித்த அதிகாரச் சட்டத்தின் மூலமும் 1653/19 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானி மூலமும் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் இச்சபையின் மூன்று விசாரணை உத்தியோகத்தர்களால் ஈடுசெய்யப்பட்டு பணிப்பாளரின் (சிகிச்சை நிலையம்) ஊடாக சபைக்கு அறிவிக்கப்படுகின்றதுடன் இந்த அதிகாரச்சட்டம் தொடர்ந்தும் மீளாய்வு செய்யப்பட்டுள்ளவாறு உள்ளது என்பதையும் தயவுடன் தெரிவிக்கின்றோம். | போதைப் பொருள் பாவனையாளர் களுக்கு நல்ல சிகிச்சைக்கான திட்டத்தை உருவாக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 753(2) | கண்டி தடுப்பு மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் பொருள் பெறுவனவு சம்பந்தமாக பொருட் பெறுவனவுப் பத்திரங்கள் கோவைப்படுத்தப் படாததால் பெறப்பட்ட சகல பொருட்களும் பதிவு செய்யப் பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்ய முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சரிவர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பதவியணியினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 754 | சகல நிதியாண்டு முடிவிலும் பொருட் பதிவேடு கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். அவ்வாறே, ஒவ்வொரு வகைப் பொருளினதும் பெறுவனவு மற்றும் வழங்கல் கூட்டிக் கணிக்கப்பட வேண்டும். அதன் பின்னர், ஒவ்வொரு வகைப் பொருள் சம்பந்தமாகவும் ‘‘கையில் உள்ள மீதி’’ அதாவது பெறுவனவின் கூட்டுத்தொகை மற்றும் வழங்கலின் கூட்டுத்தொகை என்பவற்றுக்கிடையே உள்ள வித்தியாசம் கீழே குறிப்பிடப்பட்டு அம்மீதியானது அடுத்துவரும் நிதியாண்டிற்கு முன்கொண்டு செல்லப்பட வேண்டும். எனினும், கண்டி சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் அவ்வாறு நடைபெறவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வின் பரிந்துரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2009 ஏப்ரல் 04 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் இலக்கம் 09/2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2007 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 2016 காலி புனர்வாழ்வு நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த கைவிரல் அடையாள இயந்திரத்தில் கைவிரல் சரியானது என சமிக்ஞை வெளியிடப்பட்ட போதும், இயந்திரம் வெளியிடும் தரவுகள் தொடர்பான அறிக்கைகளைக் கணனியில் பெற முடியாதிருந்தது. | இந்த வழுவானது துரிதமாக திருத்தம் செய்யப்பட்டு அடையாள இயந்திரத்தை நாளதுவரையாக்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2006 பொருட் கொள்வனவு வழிகாட்டி | | | |
| (i) | 5.2.1(அ) பிரிவு | கூறுவிலைக்கான திகதியின் பின்னரும் 12 உருக்கு அலுமாரிகளையும் 12 கபட்களையும் கொள்வனவு செய்வதற்கெனக் கிடைக்கப்பெற்ற கூறுவிலையும் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தது. | குறித்த கடிதத்தை அனுப்புவதில் தவறு ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அவ்வாறு நடைபெறாதிருக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 7.8.4(ஈ) பிரிவு | தடுப்பு மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் பயன்படுத்துவதற்கு 12 புத்தக ராக்கைகளும் உருக்கு அலுமாரிகளும் கொள்வனவு செய்யப்படுவதற்குக் கோரப்பட்ட கூறுவிலைகளில் கூறுவிலையாளர்களது கைச்சாத்திடாத கூறுவிலைகள், பெரிய தப்பாகக் கருதப்பட்டு ஏற்றுக்கொள்ளப் படலாகாது. எவ்வாறாயினும், கைச்சாத்திடாத கூறுவிலைகளைச் சபை பகுப்பாய்வுக்கு உட்படுத்தியிருந்தது. | இது தவறுதலாக ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அவ்வாறு நிகழாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 8.12.3(அ) பிரிவு | தலங்கம சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்திற்கென புத்தக ராக்கைகள் கோரப்பட்டிருந்த போதும், அவற்றின் வகை, அளவு, உயரம், நீள அகலம் என்பவற்றைக் குறிக்கும் மாதிரி வடிவம் சமர்ப்பிக்கப்படவில்லை. | நூலகத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட மாதிரி வடிவத்தின் பிரகாரம் நிலைய முகாமையாளருடன் தொலைபேசியில் கலந்துரையாடி பெறப்பட்டுள்ளன. | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டம். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டினது செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 38,259,644 பற்றாக்குறை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 28,291,721 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 9,967,923 பற்றாக்குறை அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 4,294,124 அதிகரித்தும் ஆளுக்குரிய மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 11,160,824 அதிகரித்தும் இருந்தமை இதற்கான பிரதான காரணிகளாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நவதிகந்தய சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு கட்டிடக் கூரை 4 ஆண்டுகளாகப் பழுதுபார்க்கப்படாதிருந்தது. சபை இதனைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அதிக விலையில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர சாதனங்களும் அவற்றுடன் தொடர்புடைய பயிற்சி பெறுபவர்களது வாழ்வும் மிக அபாயத்தை எதிர்நோக்கியிருந்தன. | தொழில்சார் பயிற்சிப் பிரிவின் கூரை பழுது பார்க்கப்பட்டவாறுள்ளது. | துரிதமாக திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கண்டி, நவதிகந்தய, காலி மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் ரூபா 612,000 செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்ட CCTV கெமரா முறைமை செயற்பாடாதிருந்தன. | நிதியேற்பாட்டில் உள்ள பற்றாக்குறையால் இப்பணியைச் செய்ய முடியாதுள்ளது. | சரியான மாதிரி வடிவங்களுக்கு அமைய கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பாதுகாப்புக்குத் தேவைப்படும் இந்த CCTV கெமரா முறைமையைப் பழுதுபார்ப்பதற்கு அல்லது புதிய உபகரணங்களைப் பொருத்துவதற்குச் சபை நடவடிக்கை எடுக்கவில்லை | | |

**3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் ஆய்வுகூடத்தில் பரிசோதனைகளின் பொருட்டு பயன்படுத்துவதற்காக பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 12 வகையான அபாயகர போதைப்பொருள் தொடர்பான விபரம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | ஆய்வுகூடத்தில் உள்ள விசாரணைப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டவை போதைப் பொருள் பகுப்பாய்வு நடடிக்கைகளுக்கு குறித்த நிறுவனங்களால் ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்டவையாகும். அந்த மாதிரிப் பொருட்கள் வழங்கப்படுகையில் அவற்றை வழங்குபவர்கள் எதுவித பெறுமதியையும் குறிப்பிட்டு அவற்றை ஆய்வுகூடத்திற்கு வழங்குவதில்லை. அவ்வாறே, போதைப்பொருட்கள் எந்த அதிகாரச் சட்டத்தாலும் ஈடுசெய்யப்படாததுடன், பாரத்தைப் பொறுத்தே தண்டனை அபாரதம் என்பன அமையும். உதாரணமாக, 1984 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க விஷ அபின் அபாயகர ஔடத (திருத்தம்) அதிகாரச்சட்டம். மேலும், இப்போதைப் பொருளானது அதன் பாவனையாளர்களுக்கு விற்பனையாளர்களால் நிர்ணயிக்கப்பட்ட சட்டபூர்வமற்ற பெறுமதி கொண்டனவாகும். அவ்வாறு விலையை மதிப்பிடுகையில் மதிப்பிடப்பட்ட பெறுமதியையும் குறிப்பிட முடியாதுள்ளது. ஆகவே, குறித்த போதைப்பொருள் கையிருப்பினது பெறுமதியை மதிப்பிட முடியாதுள்ளதென்பதைத் தயவுடன் தெரிவிக்க | பெறுமதியைக் கணித்து நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விரும்புகிறோம். மேலும், சட்டபூர்வ வரையறை இல்லாமையால் நிதிக்கூற்றுக்களில் பெறுமதியைக் குறிப்பிட முடியாதுள்ளது. | |
| (ஆ) | நெடுங்காலமாக போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மீண்டும் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் சேவையைப் பெற்றவாறிருப்பது தொடர்புடைய நிலையங்களின் கோவைகளைப் பரிசீலித்த போது அவதானிக்கப்பட்டது. நவதிகந்தய சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் 2 அல்லது 3 மாத கால சிகிச்சையை முடித்தவர்கள் ஓராண்டிற்குள்ளேயே மீண்டும் சிகிச்சைக்காக நிலையத்திற்கு வந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. தேவையான தொடர் நடவடிக்கைகள் முறைப்படி மேற்கொள்ளப் படாமையே இதற்கான காரணமாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | சேவையைப் பெறுபவர்களாலும் அவர்களுக்குப் பொறுப்பாக உள்ளவர்களாலும் தீர்மானிக்கப்படுகின்றது. | தொடர் நடவடிக்கைகள் முறைப்படி நடக்க வேண்டும். |
| (இ) | காலங்கடந்த ரூபா 210,883 பெறுமதியான 12 வகை இரசாயனப் பொருட்கள் இரண்டு ஆண்டுகளாக முறைப்படி கைதவிர்ப்புச் செய்யப்படாதிருந்தன. | அந்த இரசாயனப் பொருள் கையிருப்பு அழிக்கப்பட வேண்டியவனவாக பொருட் கணிப்புக் குழுவால் இனங்கண்டுள்ளது. | காலங் கடந்த கையிருப்பை களஞ்சியத் திலிருந்து அகற்ற வேண்டும். |
| (ஈ) | போதைப்பொருள் பாவனை பெருகுவதும் அதன் நூதனப் போக்கும் தொடர்பான 2016/2017 ஆய்வு அறிக்கையின் பிரகாரம் போதைப்பொருள் பாவனையாளர்களது வயதெல்லை 14 வயதுக்குக் குறைவான 13 சதவீதமும், 15 - 19 வயதுக்குட்பட்ட 16 | தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவால் பாடசாலைச் சிறுவர்களுக்கு அபாயத்தை உணர்த்துவதற்கான மனோவித்யா துறையில் அவர்களை ஈடுபடுத்தி போதைப்பொருள் பாவனையைக் குறைக்கும் நோக்குடனான சான்றின் அடிப்படையில் அடைத்த | போதைப்பொருள் ஒழிப்பு, பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை வயதின் பிரகாரம் தொகுதிகளாக்கப் பட்டு கூடிய பாடசாலை மாணாக்கரை இலக்கிட்டுச் செயற்பட வேண்டும். |

சதவீதமும், 20 - 24 வயதுக்குட்பட்ட 19 சதவீதமும் ஆக இருப்பது தெரிய வந்தது. இதன் போது, நபர் ஒருவரது ஆரம்பப் பாவனை வயது, அதாவது மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து, அதாவது ஆர்வம், பிரச்சினைகள் உள்ள சந்தர்ப்பங்களில், நண்பர்களின் தூண்டுதல், மகிழ்ச்சி, பொழுதுபோக்கு என்பவற்றின் காரணமாக ஆரம்பத்தில் பயன்படுத்தும் போக்கு என்பவற்றின் காரணமாக ஆரம்பத்தில் பயன்படுத்தும் வயது புதிய இளைஞர்களாக உள்ள அல்லது அதற்குப் பின்னரான காலமாகக் குறிப்பிட்டிருந்தது. இதற்கமைய, போதைப் பொருள் தடுப்பு பயிற்சி மற்றும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின்போது குறிப்பிடப்பட்ட சதவீதமானது பாடசாலைச் சிறுவர்களை இலக்காகக் கொண்டிருக்க வேண்டுமாயினும், இலங்கையின் 10,000 க்கும் மேற்பட்ட பாடசாலை எண்ணிக்கையில் 2013 முதல் 2019 டிசம்பர் வரை 3109 பாடசாலைகளிலிலேயே பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாகிருந்தது. அதாவது, 30 சதவீதமான பாடசாலைகள் மாத்திரமே. விஞ்ஞானபூர்வமானதும் தரம் வாய்ந்ததுமான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன. 2013 ஆம் ஆண்டில் பிரிவில் நிலவிய மனிதவள மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறை காரணமாக 137 நிகழ்ச்சித் திட்டங்களில் 21,605 மாணாக்கர்களுக்கு மாத்திரமே இதனைச் செய்யக் கூடியதாக இருந்தது. அதன் பின்னர் 2014 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு தொடக்கம் குறிப்பிடத்தக்க மனிதவளம் பிரிவில் நிலவியதால் நிகழ்ச்சித்திட்டம் கிரமமாக முன்னேற்றம் அடைந்துள்ளது. தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவானது 2018 ஆம் ஆண்டில் வருடாந்தம் 500 நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளவிருந்தபோதும், அதனையும் மீறி 670 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைபெற்றிருந்தன.

எனினும், 2019 ஆம் ஆண்டில் இலக்கை எய்த முடியவில்லை. உயிர்த்த ஞாயிறு சம்பங்களின் பின்னர் குறிப்பிடத்தக்க காலம் பாடசாலைகள் மூடப்பட்டதும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளி நபர்களும் நிறுவனங்களும் பாடசாலைக்குள் பிரவேசிக்க முடியாது போனமையும் காரணமாக நிகழ்ச்சித்திட்டங்கள் குறைவடைந்திருந்தன. அவ்வாறே பாடசாலையின் பாடவிதானத்தை ஈடுசெய்வதற்கு பாடசாலைக் காலம் அவசியம் என்பதால் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பாடசாலை வழங்கிய அவகாசம் குறைவடைந்திருந்தது.

எனினும், 2015 முதல் 2018 வரையான காலப்பகுதியின் போது கல்வி தடுப்பு மற்றும்

பயிற்சிப் பிரிவு வருடாந்த இலக்கை கணித்தவாறு வெற்றியடைந்திருந்தது. (புள்ளி விபரம் கீழே உள்ளது)

2013 தொடக்கம் 2019 வரை தடுப்பு மற்றும் கல்விப் பிரிவில் நடாத்தப்பட்ட பாடசாலை போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் பங்குபற்றியவர்களது எண்ணிக்கையும் (சபையின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம்)

| | ஆண்டு | நிகழ்ச சித் திட்ட எண்ணி க்கை | பங்கு பற்றிய வர்களது எண்ணி க்கை |
|---|---|---|---|
| 1 | 2013 | 137 | 21,605 |
| 2 | 2014 | 315 | 70,330 |
| 3 | 2015 | 564 | 99,950 |
| 4 | 2016 | 607 | 120,876 |
| 5 | 2017 | 614 | 126,456 |
| 6 | 2018 | 670 | 121,536 |
| 7 | 2019 | 390 | 79,863 |

எனினும், தீவடங்கிலும் உள்ள 10,000 க்கு மேற்பட்ட பாடசாலை எண்ணிக்கையை எமது பிரிவின் மூலவளத்தால் ஈடுசெய்ய முடியாதாகையால் அந்த இலக்கை அடைய முடியவில்லை. எனினும், பாடசாலை ஆசிரியர்களையும், வரிசை நிறுவனத்தின் உத்தியோகத்தர்களையும் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக அந் நிலைமை ஓரளவு சாத்தியமாகி உள்ளது. தற்போதுள்ள மனிதவளம் தீவடங்கிலும் 16 பிரிவுகளின் ஊடாக மாத்திரமே நடைபறுவதால் செயலளவில் இலக்கை அடைய முடியாதுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (உ) | போதைப் பொருள் விற்பனை மற்றும் அவற்றில் ஈடுபடுதலைக் கருத்திற் கொள்ளுமிடத்து, பெண்கள் அதில் ஈடுபடுவது அதிகளவில் இருப்பதாகத் தென்படுகின்றது. ஆகவே, பெண்கள் விற்பனையில் ஈடுபடுவதைக் குறைப்பதற்கு பெண்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த வேண்டும். எவ்வாறாயினும், பெண்களை இலக்காகக் கொண்ட தடுப்பு கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் கடந்த 5 ஆண்டுகளாக நடைபெறவில்லை. | இலங்கையின் நியதிச் சட்டங்களுக்கும் சர்வதேச நியமங்களுக்கும் ஏற்ப, போதைப் பொருளின் துர்ப்பிரயோகம் பெருகுவதை குறைப்பது மற்றும் போதைப்பொருளால் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கும் நிறுவனத்தின் பொறுப்பானது நிறைவேற்றப்படுவதற்கு நிவாரணக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு பின்வரும் 16 துறைகளினூடாக நாடளாவிய ரீதியில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது.<br>1 பாடசாலைச் சிறுவர்களுக்கான தடுப்புக் கல்வியும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும்<br>2 சர்வதேச பாடசாலைகளுக்கான தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்<br>3 தொழில்சார் பயிற்சியும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களில் உள்ள மாணாக்கருக்குமான தடுப்புக் கல்வியை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்<br>4 சிறு பிராயத்தினரின் அபிவிருத்தி மற்றும் போதைப் பொருள் நிவாரணத்திற்காக பெற்றோரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களும் பாடசாலைச் சிறுவர்களுக்கான தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்<br>5 பல்கலைக்கழக மாணாக்கருக்கான போதைப் பொருள் கல்வியை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்<br>6 அறநெறிப் பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான | மகளிரை இலக்காகக் கொண்ட தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். |

போதைப் பொருள் தடுப்புக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

7 அரச உத்தியோகத்தர் களுக்கான நிவாரணக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

8 சுகாதாரத் துறை உத்தியோகத்தர்களுக்கான தடுப்புக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்

9 தோட்ட வேலைகளுடன் இணைந்த மக்களுக்கான தடுப்புக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

10 சட்டத்தை அமுல்படுத்தும் உத்தியோகத்தர்களை இலக்காகக் கொண்ட தடுப்புக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்

11 பிரசைகளை இலக்காகக் கொண்ட தடுப்புக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

12 பொதுசன கண்காட்சி

13 இளைய தலைவர்களை பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

14 ஆசிரியர்களை போதைப் பொருள் தடுப்புப் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்

15 விசாலமான செயலமர்வுகள் மூலம் ஊழியர்களுக்கான போதைப்பொருள் தடுப்புக் கல்வி

16 தனிநபர்களுக்கும் குழுக்களுக்குமான ஆலோசனை

இந்த 16 பிரிவுகளிலும், மகளிர் உள்ளடங்கிய பிரிவுகளாகச் சுட்டிக் காட்டப்படக் கூடியன பெற்றோருக்கான சிறுபிராயத்தின்

| | | |
|---|---|---|
| | பிரசைகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள், தோட்டத்துறை நிவாரணக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், விசாலமான தொழிற்கூடத்திற்கான நிகழ்ச்சித் திட்டங்களாகும். இவற்றுக்கிடையே, போதைப் பொருள் பாவனை, சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை என்பவற்றில் மகளிர் குறைவாக ஈடுபடுவதற்கான விடயங்கள் கலந்துரையாடப்படுகின்றன. இதற்குப் புறம்பாக, ஏனைய பிரிவுகளின் ஊடாகவும் சம்பந்தப்படும் பெண்களை நோக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களும் வியாபிக்கப்படுகின்றன. | |

**3.5 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பன**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ரூபா 4,027,518 கிரயமுடைய ஹோமாகமவில் அமைந்துள்ள 40 பர்ச்சர்ஸ் காணி 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி 30 ஆண்டு கால குத்தகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு வரை 6 ஆண்டுகளாக பயனுள்ளவாறு பயன்படுத்தப்படாதிருந்தது. | தற்சமயம் ஹோமாகம பிடிபன காணியில் NATIONAL EDUCATION AND TRAINING CENTRE ON SUBSTANCE ABUSE MANAGEMENT அமைக்கப்படுவதற்கான ஆரம்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்போது, அதற்குரிய பணி நிறைவேற்றப்படும். | காணி பயனுள்ளவாறு பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.6 கொள்வனவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாதிரி வடிவத்தை உள்ளடக்கிய கேள்வி கோரல் தயாரிக்கப்படுதல் மற்றும் அது மீளாய்வு செய்யப்படுதல் என்பன கொள்வனவு செய்பவர்களது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அவ்வாறல்லாது கொள்வனவு முகாமையாளர் தேவையான மாதிரி வடிவத்தைத் தீர்மானித்து 8 புத்தக ராக்கைகளையும் 12 கபட்களையும் கொள்வனவு செய்வதற்கு வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகளைக் கோரியிருந்தார். | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் சரியாக நிறைவேற வேண்டும். |
| (ஆ) | 2015 ஏப்ரல் மாதத்தில் ரூபா 3,884,160 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட வீடியோ பெனல் தொழில்நுட்ப ஆலோசனையின் மூலம் உறுதி செய்யப்படாது நிறுவப்பட்டிருந்தது. இது திறந்து வைக்கப்பட்ட நாள் முதலாக 3 ஆண்டுகால உத்தரவாதமிருந்த போதும், 6 தடவைகள் பழுதடைந்து செயலற்றிருந்தது. இதன் காரணமாக எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறாது பயனற்றிருந்தது. | LED வீடியோ பெனல் சம்பந்தமாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் முறைமை முகாமையாளர் உள்ளடங்கிய தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவால் மாதிரி வடிவம் தயாரிக்கப்பட்டு பொருட் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்துடன் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. அது நிறுவப்பட்டதன் பின்னரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் முறைமை முகாமையாளரால் வீடியோ பெனல் பரிசீலிக்கப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இதன் உத்தரவாத காலம் 3 ஆண்டுகளாகும். அக்காலப்பகுதியின்போது பழுது ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் கட்டணம் எதுவுமின்றி அந்நிறுவனம் அதனைப் பழுதுபார்த்திருந்தது. | எதிர்பார்த்த நோக்கினை அடைவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உடன்படிக்கைக் காலத்தின் பின்னர் ஏற்பட்ட பழுது உடன்படிக்கைக்கு உட்பட்டிராததால் பழுது பார்க்கப்படவில்லை.<br><br>தற்சமயம் இந்த LED வீடியோ பெனல் செயலற்றிருப்பதால் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் அறிக்கை ஒன்று கோரப்பட்டுள்ளது. அந்த அறிக்கை இலத்திரனியல் செய்தி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலப் பிரதியை கோரி 2020.06.11 ஆந் திகதி ஞாபகமூட்டும் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. தொழில்நுட்ப உத்தியோகத்தர் அடங்கிய குழுவால் இது தொடர்பாகத் தீர்மானித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | |
| (இ) | 2016 ஆம் ஆண்டில் ரூபா 3,254,469 செலவில் கண்டி மற்றும் நவதிகந்தய சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் மின்னலைத் தாங்கும் முறைமை பொருத்தப்பட்டது. அவை முறையாக இயங்கவில்லை. அதனால் மின்னல் தாக்கத்தால் நிலையத்தின் உபகரணங்கள் செயலற்றுப் போனமையால் மின்னலைத் தாங்கும் முறைமைய நிறுவியதன் நோக்கம் நிறைவேறவில்லை. | தொடர்புடைய தனியார் நிறுவனத்தின் உத்தியோகத்தரின் மூலம் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சரியான மாதிரி வடிவத்துக்கமைய கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | தேசிய ஆய்வுகூடத்திற்கு NARCOTIC TRACE DETECTOR இயந்திரம் ஒன்று ரூபா 3,625,300 க்குக் கொள்வனவு | இந்த இயந்திரத்தை நிறுவும் போது அறையின் வெப்ப நிலை தொடர்பாக எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆகவே, கொள்வனவு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இயந்திரத்தை சபையின் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டு அதற்குத் தேவையான அறைக்குரிய வெப்ப நிலை HUMIDITY LEVEL தயாரிக்கப்படாததால் பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 8 உதவி ஆலோசனை உத்தியோகத்தர்கள் சபையின் 98/2017 ஆம் இலக்க அங்கீகாரம் மாத்திரமே பெறப்பட்டு நியமிக்கப்பட்டிருந்தனர். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு முன்னர் பூர்வாங்க அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வுத் திட்டமானது 7 பிரதான பணிகளை உள்ளடக்கியவாறு தயாரிக்கப்பட்டிருந்தபோதும், அதில் 2 பணிகள் மாத்திரமே நிறைவேறி இருந்தன. அதாவது, 134(3) ஆம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதற்குப் புறம்பாக, பணிப்பாளர் சபையால் வெளிச் சேவைப் பிரிவுக் கணக்காய்வு நடவடிக்கையையும் உள்ளடக்கப்படக்கூடியவாறு அத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதுவும் நிறைவேறியதற்கான சான்று இருக்கவில்லை. அவ்வாறே, 2019 சனவரி முதல் டிசம்பர் வரை உள்ளகக் கணக்காய்வு மற்றும் உதவிப் | 2019 கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் 02, 06, 07 ஆம் தொடர் இலக்க கணக்காய்வு நடவடிக்கைகள் அண்மையில் ஏற்பட்ட கொவிட் - 19 நோய் காரணமாக நிறைவேற முடியாது போனது. 01 ஆம் 05 ஆம் தொடர் இலக்க விடயங்கள் 2019 மே தொடக்கம் 2019 டிசம்பர் வரை பொது முயற்சிகள் தொடர்பான அறிக்கைத் தயாரிப்பின் காரணமாக அக்கணக்காய்வு நடைபெறவில்லை. எதிர்காலத்தில் இதுவரை சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளக கணக்காய்வு உயர் செயலாற்றலை நிறைவேற்ற வேண்டும். |

பதவியணியினருக்கு சம்பளமும் படியுமாக ரூபா 1,214,550 கொடுப்பனவு செய்தும் சபை பயனுள்ள சேவையைப் பெற்றிருக்கவில்லை.

## 4.2 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினது வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட செலவினத்தை உள்ளவாறான செலவினத்துடன் இணக்கம் செய்கையில் 18 செலவின விடயங்களில் -260 தொடக்கம் 51 வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால் வரவு, செலவுத் திட்டமானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | மீளாய்வாண்டின் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே 10 செலவின விடய வேறுபாடுகளை கணக்காய்வு அவதானித்துள்ளது. அவற்றுள், சில செலவினம் மதிப்பிடப்பட்ட தொகையிலும், குறைந்துள்ளமை 2019 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியின் போது ஏற்பட்ட சாதகமற்ற சிவில் நிலைமையால் எதிர்பார்த்த செலவினம் ஏற்படாமையால் ஏற்பட்டதாகும்.<br><br>மறுபுறத்தே, சில செலவினம் மதிப்பீட்டிலும் அதிகரித்தமை 2019 ஆம் ஆண்டின் போது கொள்கை மாற்றம் ஏற்பட்டமை மற்றும் முகாமைத்துவத் தேவைகளின் அடிப்படையில் சில வேறுபாடுகள் ஏற்பட்டதாலேயாகும். உதாரணமாக முகாமைத்துவத் தீர்மானத்தின் பிரகாரம் மேலதிக நேர வேலைக்கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டமை மற்றும் தலங்கம நிலையத்தில் இரவு நேரத்தில் பெண்களுக்கான பாதுகாப்புச் சேவை ஏற்படுத்தப்பட்டதுமே ஆகும். | வரவு, செலவுத் திட்டம் சரிவரத் தயாரிக்கப்பட வேண்டும். |